Registered as a News Paper    பக்கங்கள் 06    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2024    தை 13    (26-01-1993) செவ்வாய்க்கிழமை    ஓசை 343

## பாடசாலை அபிவிருத்தி 1000ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள சுமார் 302 பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்களுக்கு வழங்கவென சுமார் 3 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் நிறுவப்பட்டு அதற்கென வங்கிக் கணக்கு ஆரம்பித்திருக்கும் பாடசாலைகளுக்கு தலா 1000ரூபா விகிதம் வழங்கப்பட (5-ம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் குண்டு வெடிப்புகள்

# விழுப்புரம் காந்தி சிலை தகர்ப்பு

## கிழக்கு தாக்குதலில் ஒரு படை பலி

[மணிலா]

கிழக்கு மாகாணத்தில் ரோந்து சென்ற சிறிலங்கா அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதல் ஒன்றில் விசேட அதிரடிப்படைகொமாண்டோ ஒருவர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

## பொலநறுவையில் சிப்பாய் பலி

பொலநறுவை மாவட்டம் அலம்வெவ கிராமத்தில் கடந்த புதனன்று விடுதலைப்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## கட்டுநிதி வந்தது

(யாழ். பாணம்)

யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கான சம்பள கட்டுநிதி நேற்று யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் கொண்டு வந்து சேர்த்தார்.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## கிட்டுவுக்கு ஆதரவாக சுவரொட்டிகள்

(சென்னை)

தமிழ்நாட்டில் மூன்று வெவ்வேறு இடங்களில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றன. இககுண்டு வெடிப்பு ஒன்றினால் விழுப்புரத்தில் காந்திசிலை ஒன்று தகர்க்கப்பட்டது.

இதேவேளை தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையின், பல பாகங்களிலும் வீரமரணமடைந்த கேணல் கிட்டுவிற்கும் ஏனைய 9 போராளிகளுக்கும் அஞ்சலி தெரிவிக்கும் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.

தமிழ்நாட்டில் மூன்று வெவ்வேறு இடங்களில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றதாக தமிழ்நாடு காவல் துறையினர் அறிவித்துள்ளனர்.

இவற்றில் இரண்டு இடங்களில் தமிழ்நாடு காங்கிரஸ் அலுவலகங்களாகும். அத்துடன் இக் குண்டு வெடிப்புகளினால் காந்தி சிலையொன்றும் தகர்க்கப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் பற்றி மேலும் தெரியவருவதாவது;

விழுப்புரம் நகராட்சி அலுவலகத்திற்கு ச[illegible] வைக்கப்பட்டிருந்த குண்டொன்று வெடித்ததினால் அ[illegible] காந்திசிலை [illegible] பட்டுள்ளது. சேலம் மாவட்டம் ஆத்தூரிலும், நாகபட்டினம் அருகே குடவாசலிலும் காங்கிரஸ் ஆலுவலகங்களில் குண்டுகள் வெடித்தன. இவ் இடங்களில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான துண்டுப் பிரசுரங்கள் கண்டுபிடிக்கப் பட்டதாக தமிழ்நாடு காவல் துறையினர் மேலும் தெரிவித்தனர்.

( 5 ஆம் பக்கம் பார்க்க )

# திருமலை,வன்னியில் தாக்குதல்கள் 18 இராணுவம் பலி: பலர் காயம்

(நமது நிருபர்)

திருமலை; வன்னி பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இருவேறு தாக்குதல்களில் குறைந்தது 18 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். இத்தாக்குதல்கள் இரண்டும் இருபத்திநான்கு மணி நேர இடைவெளிக்குள் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த இரு தாக்குதலிலும் ஏழு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

### திருமலை

திருக்கோணமலை - மட்டக்களப்பு எல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் பகல் விடுதலைப் புலிகள் நடாத்திய ஓர் அதிரடித் தாக்குதலில் 14 இராணுவத்தினர் பலியாகினர். பலர் காயமடைந்தனர்.

'சுமித்திரா' எனும் கிராமத்திலுள்ள சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து கந்தளாய் பாலத்திற்கு ரோந்து சென்ற 30 பேரைக் கொண்ட இராணுவ அணி மீதே பகல் 12 30 மணியளவில் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலின்போது உயிர் தப்பிய ஏனையோர் காயங்களுடன் அருகிலுள்ள முகாமிற்கு தப்பி ஓடிவிட்டனர்.

இதேவேளை 'சுமித்திரா' கிராம இராணுவ முகாமிலிருந்தும் கந்தளாய் பாலத்தில் உள்ள இராணுவ முகாமிலிருந்தும் வெளியேறி உதவிக்கு வந்த இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகளால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

# திருமலை - மூதூர் படகு 110 பயணிகளுடன் மூழ்கியது

## 7 படை உட்பட 40 பேர் பலி

[திருக்கோணமலை]

திருகோணமலைக் கடற் பிராந்தியத்தில் 110 பேருடன் சென்றுகொண்டிருந்த படகு ஒன்று விபத்துக்குள்ளாகி மூழ்கியுள்ளது. இதனால் இதில் பயணம் செய்த நாற்பதுக்கு மேற்பட்டோர் இறந்திருக்கலாம் என அஞ்சப் படுகிறது. இதுவரை அறுபது பேர் மீட்கப்பட்டுள்ளனர். 40 சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. உயிருடன் மீட்கப் பட்டோரில் 15 பேர் ஆபத்தான நிலையில் கடற்படை வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

திருகோணமலைத்துறை முகத்தில் இருந்து மூதூர் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இப் படகில் சிறிலங்கா இராணுவத்தினர் உட்பட நூற்றுப்பத்துப்பேர் பயணம் செய்துகொண்டிருந்தனர். நேற்றுமாலை 2.30 மணியளவில் இப்படகு கடலில் மூழ்கியது. இப்படகில் சென்ற அறுபது பேரை கடற்படையினர் உயிருடன் மீட்டனர். இதுவரை ஏழு இராணுவத்தினர் உட்பட நாற்பது பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

### திருக்கோணமலையில்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை - மட்டக்களப்பு எல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- O ஏ. கே. எல். எம். ஜி - 02
- O ரி-56-2 ரக துப்பாக்கி - 04
- O ரி-56-1 ரக துப்பாக்கி - 04
- O ரி-81-1 ரக துப்பாக்கி - 03
- O ஏ.கே.எல்.எம் ஜி மகசின் - 09
- O ஏ.கே.எல்.எம்.ஜி.லிங் - 786
- O ரி-56 மகசின் - 25
- O ரி-81 மகசின் - 09
- O நடுத்தர ரவைகள்- - 1406
- O ஜே.ஆர். கைக்குண்டு - 02
- O புகைக்குண்டு - 01
- O ஏ.கே. கோல்சர் - 06
- O புலட்புரூப் ஜக்கற் கோல்சர் - 05
- O தலைக்கவசம் - 03
- O இராணுவச் சப்பாத்து - 02 (சோடி)
- O இராணுவப்பட்டி - 01
- O இராணுவத் தொப்பி - 01

### செட்டி குளத்தில்

செட்டிகுளம் பகுதியில் தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய திடீர் அதிரடித் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

- O 203 பிஸ்டன் - 01
- O ரி 56-1 ரக துப்பாக்கி - 01
- O ரி 81-1 ரக துப்பாக்கி - 01
- O ரி 56 மகசின் - 03
- O ரி 81 மகசின் - 05

( 5 ஆம் பக்கம் பார்க்க )

# 7 வேங்கைகள் வீரச்சாவு

### திருக்கோணமலையில்

திருக்கோணமலை - மட்டக்களப்பு எல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் அதிரடித் தாக்குதலின் போது மூன்று விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

2 ஆம் லெப்டினன்ட் வேணு சிசெல்வன் / கரன் பொன்னையா அரசரத்தினம், 5 ஆம் வட்டாரம் துறைநீலாவணை.

2 ஆம் லெப்டினன்ட் பிரம்மன் / சோழன் மாணிக்கப்போடி சோமசுந்தரம், கிரான் குளம் குருக்கள்மடம்.

வீரவேங்கை சத்தியசாயி / புவிராஜ் சத்தியமூர்த்தி மகிரதன் கல்முனை அம்பாறை.

ஆகிய மூன்று போராளிகளுமே இத்தாக்குதலில் வீரச்சாவு அடைந்தவர்களாவர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### செட்டிகுளத்தில்

செட்டிகுளத்தில் நேற்று அதிகாலை இராணுவ தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலின்போது நான்கு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர் வீரச்சாவு அடைந்த போராளி

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## பிரான்ஸ் வைத்தியர் கொழும்பு பயணம்

மந்திகை வைத்தியசாலையில் இருந்து பிரான்ஸ் நாட்டு

(5-ம் பக்கம் பார்க்க)

## மீட்பு நிதி சேகரிப்பு

நாளை புதன்கிழமை பிற்பகல் 3 00 மணி முதல் 3. 30 மணி வரையும் - எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 30 மணி தொடக்கம் 10. 00 மணிவரையும் நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் மீட்பு நிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### மாற்றம் :02

மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டிய மாற்றங்களைக் கொண்ட "மாற்றம்" (தை-பங்குனி சஞ்சிகை) சிறுவர்கதை, சிறுகதை, அறிவியல் துணுக்குகளைக் கொண்டு வெளிவந்து விட்டது ரூபா 10/- புத்தகசாலைகளில் கிடைக்கும். வெளியீடு தமிழ்த்தாய் மன்றம் (4126)

### அராலியூரரின் நாடகங்கள்

அராலியூரரின் வானொலி நாடகங்களை பலரும் மேடையில் நடித்துவிட்டனர். மாணவர்களும் நடிப்பதற்கேற்றவை நடித்தால் சிரித்து மகிழலாம். 1. கெட்டிக்காரர்கள் 2 முதலாம்பிள்ளை, 30/- இலக்கியப் பரிசுபெற்ற 19 நாடகங்கள். (3243)

## நிர்வாகிகள் தெரிவு

நல்லூர் சனசமூக நிலையத்தின் நடப்பாண்டிற்கான புதிய நிர்வாகிகள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவராக வ. பாலச்சந்திரனும், செயலாளராக எம். எஸ் கே மூர்த்தியும், பொருளாளராக தி சிறிதரனும், விளையாட்டுச் செயலாளராக க சூரியகுமாரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் மேலும் ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

★

வள்ளிபுரம் ஐக்கிய சனசமூக நிலையத்தின் அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் நடப்பு வருட நிர்வாகிகளைத் தெரிவு செய்துள்ளது. தலைவராக திரு. பிலிப் நீக்கிலஸும், செயலாளராக எம். என். நவரட்ணமும், பொருளாளராக ரி. ஜே கிறிஸ்ரி ஆகியோரும் மற்றும் உத்தியோகத்தர்களுடன், ஏழு செயற்குழு உறுப்பினர்களும் இங்கு தெரிவாகினர்.

## வீதிகள் புனரமைப்பு

கிளிநொச்சிக் கோட்டத்திலுள்ள இரத்தினபுரம் வீதி மற்றும் கெனடி வீதி ஆகியவற்றின் புனரமைப்பு வேலைகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் தேசநிர்மாணிகளால் செய்துமுடிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரம் வீதியில் 2 மைல் நீளமான பகுதியும், கெனடி வீதியின் முதல்மைல் இறுதியும், இரண்டாம் மைல் முற்பகுதியும் பல இலட்சம் ரூபா செலவில் திருத்தி முடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தளபாடம் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

நாவலர் வீதியில் ஐந்து சந்திக்கு அருகில் உள்ள கதீஜா மகா வித்தியாலயத்தில் இயங்கி வரும் வேலணை மேற்கு நடராசா வித்தியாலயத்தில் பெரும் தளபாடப் பற்றாக்குறை நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. சுமார் 150 மாணவர்கள் கல்வி கற்கும் இப்பாடசாலையில் கற்களை அடுக்கி அவற்றின் மேல் "பிளேற்றைப்" போட்டு மேசை போல் அமைத்தே மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். இத்தட்டுப்பாட்டை நீக்குமாறு பிரஸ்தாப வித்தியாலய அதிபர் திரு. வ. நல்லையாவும், பாடசாலை அபிவிருத்தி சபையினரும், கோட்டக் கல்வி அலுவலகத்திடம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (22)

## கிளிநொச்சியில் கால் நடைகளுக்கு கால், வாய் நோய் பரவுகிறது

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் கால்நடைகளுக்கு கால், வாய், நோய்கள் பரவி வருவதாகத் தெரிய வருகின்றது. இந்த நோய்க்கென பாவிக்கப்படும் எவ். எம். பி மருந்தும் தட்டுப்பாடாக இருக்கின்றமையால் கால்நடை வளர்ப்பவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்த நோய் தொற்றியிருக்கும் கால்நடைகளை மற்ற விலங்குகளிலிருந்து பிரித்து வைப்பதோடு தொழுவங்களை துப்புரவாக வைத்திருப்பதன் மூலம் மேலும் பரவாது தடுக்க முடியுமென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

அத்துடன் கால்நடையின் ஆறுமாத கால வயதிலிருந்து தடுப்பூசி போடப்படுவதன் மூலமும், நோய் ஏற்படாமல் தடுக்கலாம் எனவும், நோயினால் ஏற்பட்ட காயத்தை உப்புநீரால் கழுவிய பின்னர் ஸ்டொக்ஹொம் மாத் ஒருபங்கு வேப்பெண்ணை நான்கு பங்கு தேங்காய்எண்ணை ஐந்துபங்கு கொண்ட கலவையை தொடர்ந்து பூசிவந்தால் குணப்படுத்தலாம் எனவும் அச்செய்திக் குறிப்பில் மேலும்கூறப்பட்டுள்ளது.

## திருவள்ளுவர் மன்ற நிர்வாகிகள் தெரிவு

தமிழீழத் திருவள்ளுவர் மன்றம் அண்மையில் நடாத்திய பொதுக் கூட்டத்தில் மன்றத் தலைவராக சி. பாலசுப்பிரமணியமும், செயலாளராக க. விமலநாதனும், பொருளாளராக த. கனகநாயகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மற்றும் உத்தியோகத்தர்களுடன் பத்துச் செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டதோடு, புதிய யாப்பும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் இலவச திருக்குறள் வகுப்புகள் நடத்துவது பற்றியும், வள்ளுவப் பெருந்தகைக்கு விழா எடுப்பது பற்றியும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## சிரமதானம்

யாழ்ப்பாணம் றோட்டரக்ட் கழகத்தினர் அண்மையில் அரசினர் வைத்தியசாலையில் சிரமதானப் பணியை மேற்கொண்டதுடன் வைத்தியசாலைச் சூழலில் மரங்கள் நாட்டுதலையும் செய்துள்ளனர்.

## ஈழநாதம் 3-ம் ஆண்டு நிறைவு

### போட்டிகளும் விதிமுறைகளும்

மக்கள் தினசரி 'ஈழநாதம்' தன் மூன்றாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக கருத்துப் படப் போட்டி (Cartoon), கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி என்பனவற்றை நடாத்த முன்வந்துள்ளது இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

- கருத்துப் படங்கள் [Cartoon]
- சிறுகதை
- கவிதை

### போட்டியில் கலந்து கொள்ள கடைப்பிடிக்க வேண்டியவை

★ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்.

★ கருத்துப் படங்கள் 15 செ.மீ X12 செ.மீ அளவுள்ள அட்டையில் கறுப்பு, வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.

★ படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்,

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

★ ஆக்கங்கள் இதற்கு முன் பிரசுரமானவைகளாகவோ, வேறெங்கும் பிரசுரம் பெறுவதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் பெப்ரவரி 5ஆம் திகதிக்கு பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்திற்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் போட்டிக்கான முடிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது என்பதுடன், பிந்திக்கிடைப்பவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

★ போட்டி முடிவுகள் யாவும் 17-02-1993 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.

மூன்றாவது ஆண்டு நிறைவு விழா போட்டியில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானது எனத்தேர்ந்தெடுக்கப்பட்டவை ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும் முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு மூன்றாவது ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம்' ஆண்டு நிறைவுப் போட்டி என கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு.

ஆசிரியர்
'ஈழநாதம்'
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## நினைவு கூருகின்றோம்...

### 1993-1-26

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் முல்லைத்தீவு-ஒட்டிசுட்டான் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

லெப்.சசி (கந்தசாமி மகேஸ்வரன் கொக்குத்தொடுவாய் மணலாறு)

இம் மோதலின் பின், இப்பகுதிச் சந்தைக்குப் பொருள்கள் வாங்க வந்த பொதுமக்கள் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்ட 5 தமிழர்கள்.

திருக்கோணமலை-தம்பலகமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

வவுனியா-மாறம்பைக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இளம்பெண்.

1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம்-கொடிகாமம் பகுதியில் இந்தியப்படையினர்க்கெதிரான தாக்குதல் முயற்சியின் போது வீரச்சாவெய்திய-

பாலன் (சோமசுந்தரம் சிவபாலன் - முல்லைப்புலவு. காரைநகர்-யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

லெப்.முரளி (சிவசுப்பிரமணியம் ஜெயக்குமார்- விபுலானந்தர் வீதி, மாதகல் - யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு வாழைச்சேனை, கிண்ணையடிப்பகுதியில் இந்தியப்படையினர் மேற் கொண்ட தாக்குதலில் கொலைப்பட்ட குழந்தை, தாய் உட்பட 5 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் எழுவைதீவுப் பகுதியில் சிறிலங்காக்கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஊர்காவற்றுறைச் சேர்ந்த தமிழிலைஞர்-யாழ் இந்துக்கல்லூரிக்குட் புகுந்த இந்தியப்படையினரால்-கல்வி போதித்துக் கொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்ட ஆசிரியரான தமிழ்ப்பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு தமிழகத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் எமைப்பிரிந்த.

சின்னக்காந்தி - சௌத்திரி (கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம் - கொல்லங்கலட்டி, மயிலிட்டி, காங்கேசன்துறை - யாழ்ப்பாணம்)

1991ஆம் ஆண்டு மட்டக்களப்பு - வாகரை அல்லை வீதியில் எதிர்பாராத விதமாக எமது கண்ணிவெடியில் சிக்கியதில் காயமுற்ற போது சயனைட் உட்கொண்டு எமைப்பிரிந்த

சாந்தன் (இரத்தினம் கதிர்காமநாதன் - கல்முனை - அம்பாறை)

கிளிநொச்சி - ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய-

பற்றிக் (சின்னராசா கணேசலிங்கம் - 6-ம் வட்டாரம், சாம்பல்தீவு, மூதூர் - திருக்கோணமலை)

1991 ஆம் ஆண்டு மன்னார் - நாவற்குளம் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

மேஜர் கௌரி - சுதுஜீவன் (சதானந்தன் அனுதீபன் - பாலப்பொருமான்கட்டு, வட்டக்கண்டல்-மன்னார்)

1992ஆம் ஆண்டு சுகவீனங்காரணமாக எமைப் பிரிந்த

உமாகரன் (சித்திரவேல் அந்தோனி - டானியல் வீதி, புதூர் - மட்டக்களப்பு)

அம்பாறை - தம்பிலுவில் விநாயகபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

ஜெயநாதன் - மரதராஜ் (வீரக்குட்டி இந்திரகுமார் - தபாலக வீதி, பனங்காடு, அக்கரைப்பற்று - அம்பாறை)

மேகனராஜ் (கிருஷ்ணபிள்ளை ரமேஷ் - தம்பிலுவில் - 02 - அம்பாறை)

சுகிவர்மன் - சஜி (வன்னியசிங்கம் ரவீந்திரன்- தம்பிலுவில் - 01 - அம்பாறை)

மட்டக்களப்பு- 40 ஆம் கிராமத்தைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

திருக்கோணமலை - கடற்கரைச்சேனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(பி/5876)

# யாழ். மாநகர சபைக்கு 15 மில். ரூபா ஒதுக்கீடு

[மானிப்பாய்]

யாழ் மாநகரசபையின் 93-ம் ஆண்டுக்கான அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கென 15மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியினை புனருத்தாரண அமைச்சும், வடக்கு கிழக்கு மகாண உள்ளூராட்சி திணைக்களமும், யுனிசெவ்வும் வழங்கியுள்ளன. இந்நிதி கடந்த காலத்தில் செய்யப்பட்ட அபிவிருத்திமற்றும் புனருத்தாரண வேலைகளுக்கு ஒதுக்கப்படுவது மட்டுமல்லாமல் புதிய செயற்திட்டங்களுக்கும் இவ் வருடம் பயன்படுத்தப்படவுள்ளது.

இவ்வருட அபிவிருத்தி செயற்பாடுகளில் நீர் முங்கல் திட்டத்துக்கு இரண்டு மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் இதனோடு இணைந்த செயற்திட்டங்களான குளங்களை ஆழமாக்கல். வாய்க்கால்களை சீர் செய்தல் மற்றும் மகப்பேற்று நிலைய அபிவிருத்தி, வீதி புனரமைப்பு நூல் நிலைய தளபாடங்கள் அமைத்தல் புத்தகங்கள் கொள்வனவு என்பனவற்றுக்கு இவ் நிதி பயன்படவுள்ளது என யாழ் மாநகரசபை ஆணையாளர் வே பொ பாலசிங்கம் அவர்கள் தனது பாதீடு பற்றிய செவ்வியில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தனது செவ்வியில் இவ்வாண்டு சில புதிய அபிவிருத்தி முயற்சிகளை செய்வதற்கு மாநகரசபை நிர்வாக பீடம் உத்தேசித்துள்ளதாகவும் இதன் முதல்கட்டமாக நல்லூரின் தென்மேற்கு பகுதியில் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.மேலும் நீச்சல் குளங்களும் அமைப்பதற்கு இம்முறை உத்தேசிக்கப்பட்டு அது வெகுவிரைவில் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# எழுதுவினைஞர் பரீட்சை 30ஆம் திகதி நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

இந்த மாதம் முப்பதாம் திகதி நடைபெறவுள்ள எழுதுவினைஞர்கள் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் மற்றும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் அனைத்தும் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்திற்கு நேற்று எடுத்து வரப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து கடந்த சனிக்கிழமையன்று விமானம் மூலம் வந்த யாழ்ப்பாணப் பரதேச கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் இவற்றை எடுத்து வந்தார். எனினும் நேற்றுக் காலையிலேயே 'குமாரி' கப்பல் மூலம் காங்கேசன் துறையிலிருந்து பருத்தித்துறை துறைமுகத்திற்கு இவை எடுத்து வரப்பட்டது.

## மகாசங்காபிஷேகம்

எழுதுமட்டுவாழ் விழுபழை சிறீமீனாட்சிஅம்பாள் ஆலயத்தில் மகாசங்காபிஷேகம். எதிர் வரும் வெள்ளிக்கிழமையன்று காலையில்நடைபெறவுள்ளது. காலை எட்டுமணிமுதல் ஆரம்பமாகும் சமயக் கிரியைகளை யடுத்து நண்பகலில் அடியார்களுக்கு அன்னதானமும் நடைபெறவுள்ளது.

# ஏழை விவசாயிகளுக்கு நெற்காணி பகிர்ந்தளிப்பு

(யாழ்ப்பாணம்)

வறுமையில் இருந்த இருபது விவசாயக் குடும்பங்களுக்கு தலா பத்துப்பரப்பு நெற் செய்கைக்காணிகள் வீதம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இந் நெற்செய்கைக் காணிகள் தென்மராட்சிக் கோட்டம் கைதடி இணைப்பாளர் வட்டத்தில் நாவற்குழி மேற்கு கிராமிய உற்பத்திக் குழுப்பிரிவில் அமைந்துள்ளன. தென்மராட்சி கோட்ட அரசியல நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பொ. கந்தன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக கோட்ட இணைப்பாளர் ஆகியோர் காணிவழங்கும் நிபந்தனைப் பத்திரத்தினை ஒப்பமிட்டு வழங்கியுள்ளனர்.

மேற்படி காணி வழங்கும் வைபவத்தில் விவசாயிகள், மற்றும் பொது மக்களுடன் தென்மராட்சிக் கோட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக இணைப்பாளர், கைதடி, நாவற்குழி கிராமிய பொறுப்பாளர், கைதடி வட்டவைப் பொறுப்பாளர் வட்ட இணைப்பாளர், உற்பத்திக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# முகாமைத்துவ கருத்தரங்கு 4ஆம் திகதி ஆரம்பம்

கோட்டங்களில் கடமையாற்றும் உப அதிபர்கள், பிரதி அதிபர்கள் பகுதித் தலைவர்களுக்கான முகாமைத்துவக் கருத்தரங்குகள் 04-02-93இல் இருந்து ஆரம்பமாக உள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள முகாமைத்துவப் பிரிவுக் கல்விப் பணிப்பாளர் திரு சி. புலேந்திரன் சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

உப அதிபர்கள், பிரதி அதிபர்களுக்கான முகாமைத்துவ கருத்தரங்கு மாசி மாதம் 4-02-93 தொடக்கம் 7-02-93 வரையும், 19 02-93 தொடக்கம் 22-02-93 வரையும் நடைபெற உள்ளது

பகுதித் தலைவர்களுக்கான முகாமைத்துவ கருத்தரங்கு பங்குனி மாதம் 25-03-93 தொடக்கம் 28-03 93 வரையும், சித்திரை 9-04 93தொடக்கம் 12-04-93 வரையும், 23-04-93 தொடக்கம் 26-04-93 வரையும், வைகாசி 06-05-93 தொடக்கம் 09-05-93 வரையும் நடைபெற உள்ளது.

அதிபர் தரம் I இற்குரிய பின்னூட்டல் வகுப்புகள் வைகாசி மாதம் 21-05-93 தொடக்கம் 24-05-93 வரையும், ஆனி மாதம் 04-06-93 தொடக்கம் 07-06-93 வரையும் நடைபெற உள்ளது.

அதிபர் தரம் II இற்குரிய பின்னூட்டல் கருத்தரங்கு ஆனி மாதம் 25-06-93தொடக்கம் 28-06-93 வரையிலும், ஆடி மாதம் 02-07 93தொடக்கம் 05-07-93 வரையிலும் நடைபெற உள்ளது.

அதிபர் தரம் III இற்குரிய பின்னூட்டல் வகுப்புகள் 03-08-93 தொடக்கம் 06-08-93 வரையிலும், 01-10-93 தொடக்கம் 04-10-93 வரையிலும், 23-10-93 தொடக்கம் 26-10-93 வரையிலும், 12-11-93 தொடக்கம் 15-11-93 வரையிலும் நடைபெற உள்ளது. (17)

### கலை இலக்கிய, பத்திரிகையாளர் நடாத்தும்

# இந்திய அரசை கண்டித்து கண்டன பேரணி; பொதுகூட்டம்

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து போராளிகள் வீரச்சாவடையக் காரணமான இந்திய அரசின் மேலாதிக்க உணர்வைக் கண்டித்தும் வீரச்சாவடைந்த போராளிகளுக்கு அஞ்சலி செய்யும் முகமாகவும் மாபெரும் கண்டனப் பேரணியும் பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

தமிழீழ கலை இலக்கிய பத்திரிகையாளர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து நடாத்தவுள்ள இக்கண்டனப் பேரணி நாளை நண்பகல் 2-00 மணிக்கு நாச்சிமார் கோவிலடியில் இருந்து ஆரம்பமாகி யாழ் பல்கலைக்கழகத்தை வந்தடையவுள்ளது.

தொடர்ந்து மாலை 3-00 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இவ் அஞ்சலிக்கூட்டத்தில் விடுதலைப்புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் உட்பட பத்திற்கு மேற்பட்ட கலை இலக்கிய பத்திரிகையாளர் அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் உரை நிகழ்த்தவுள்ளனர்.

இவர்களின் அஞ்சலி உரையைத் தொடர்ந்து நாதஸ்வரக் கலைஞர்களின் நாத அஞ்சலி நிகழ்வும், வயலின் கலைஞர்களின் நாதகான அஞ்சலி நிகழ்வும், யாழ் நாடக அரங்கக் கல்லூரியினரின் ''அமைதி தேடி வந்த புறா சிறகிழந்தது'' என்ற கவிதா நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

அனைத்துக் கலைஞர்களையும் தவறாது ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டு வீரச்சாவடைந்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும்படியும், சாவுக்குக் காரணமான இந்திய வல்லாதிக்க அரசுக்குத்தங்கள் கண்டனத்தைத் தெரிவிக்கும்படியும் மேற்படி கலை இலக்கிய பத்திரிகையாளர் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## மினிபஸ் விபத்துக்குள்ளானது

நூற்றுக்கு மேற்பட்ட பயணிகளை ஏற்றியவாறு சென்ற மினிபஸ் ஒன்று வீதியைவிட்டு விலகி ஓடி வேலியொன்றுடன் மோதியது. எனினும் பஸ்ஸில் பயணம் செய்த பயணிகள் சிறு சிறு காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். கடந்த 23 ஆம் திகதி இரவு ஏழு மணியளவில் புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரிக்கு அருகில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மினிபஸ்சே விபத்திற்குள்ளாகியது குறிப்பிடத்தக்கது இந்த விபத்திற்கு சாரதியின் அனுபவக் குறைவே காரணம் எனவும் கூறப்படுகிறது.

## அறிஞர் விழாவும் பரிசளிப்பும்

(பரு: த்துறை)

தென்புலோலி அறிஞர்விழாவும் பரிசளிப்பும் பெரிய தேவனத்தாய் சனசமூக நிலையத் தலைவர் திரு க. வ. செல்வராஜன் தலைமையில் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது பருத்தித்துறை பிரதேச சபை புலோலி உப அலுவலக பொறுப்பதிகாரி திரு. ச சிவசுப்பிரமணிய தேவா குத்து விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

தென்புலோலி அறிஞர்களான க. முருகேசு அவர்களின் உருவப்படத்திற்கு உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. வி சே ஏகாம்பரநாதனும், தமிழ்த்தாத்தா கந்த முருகேசனாரின் உருவப்படத்திற்கு அரவைக்கிழாரும், பண்டிதர் பொன் சின்னத்துரையின் உருவப் படத்திற்கு சட்டத்தரணி இ.சதானந்தனும் மலர்மாலைகளையணிவித்து உரையாற்றினார்கள்.

இவ் விழாவையொட்டி நடாத்தப்பட்டிருந்த மென்பந்து துடுப்பெடுத்தாட்டப் போட்டிக்கான பரிசில்களை வடக்கு கிழக்கு மாகாண சபையின் யாழ் செயலக நிர்வாக அதிகாரி திரு வே. வீரபத்திரபிள்ளை வழங்கினார். தமிழீழ சமுதாய மலர்ச்சியில் முக்கியபங்கு தாயா ? தாரமா? என்னும் தலைப்பில் திரு. மு. ஸ்ரீபதி தலைமையிலான பட்டி மன்றம் உட்பட பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (25)

# ஆமணக்கு உற்பத்தி ஊக்குவிக்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

தமிழீழம் எங்கும் இன்று பல தேவைகளுக்கும் ஆமணக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு பயன்படுத்தப்படும் ஆமணக்கை மேலும் விருத்தி செய்யும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் பல நடவடிக்கைகளை பரவலாக மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில் மேற்படி ஆமணக்கு செய்கையை கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வட்டக்கச்சிப் பகுதியில் 10 ஏக்கர் காணியில் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை அபிவிருத்திசபை விபரம் அனுப்பப்பணிப்பு

கல்வி உயர்கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின்படி 30 9 92க்கு முன்னர் பாடசாலைகளில் பாடசாலை அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் அபிவிருத்தி நிதியமும் வங்கிக் கணக்கும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும், ஆனால் இதுவரை சில பாடசாலைகள் இவைகளை இன்னமும் ஆரம்பிக்கவில்லை எனவும் இவைகள் பற்றிய விபரங்களை உடனடியாக தமக்கு அனுப்பி வைக்குமாறு சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்களையும் யாழ் கல்வித்திணைக்களம் கடிதம் மூலம் கேட்டுள்ளது. [17]

# பயிலுநர் ஆசிரியர்கள் இடமாற்றம் இல்லை

பயிலுநர் ஆசிரியர்களாக பாடசாலைகளில் கடமை புரிபவர்கள் இடமாற்றம் பெற விண்ணப்பங்களை சமர்பிக்க முடியாது என கல்விச் சேவை ஆணைக்குழு தீர்மானம் எடுத்துள்ளதாக கல்விச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் திரு ஏ. எஸ். வீரரத்தின சுற்றறிக்கை மூலம் சகல மாவட்ட கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் தெரியப்படுத்தி உள்ளார்.

பயிலுநர் ஆசிரியர்களாக கடமை புரிபவர்கள் நிரந்தர நியமனம் பெறும் வரை இடமாற்றம் பெற தகுதியற்றவர்கள் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். [17]

# 31-ம்நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 21 — 04 — 1923



உதிர்வு 28 — 12 — 1992

அமரர்

## திருமதி இராசம்மா கந்தசாமி

தாயே தவப்பயனே தம் மக்கள் வாழ்வதற்காய்
தன்னை நாள் பகலாய் தந்தவளே உத்தமியே
ஓயாத நின் உடம்பு ஓய்ந்து ஒரு திங்களாச்சு
ஓய்வில்லை எம் துயரம் ஒரு கணமும் உனை மறந்து -நீ
போயே திங்களொன்று போனாலும் அன்னையளே
நீயே நித்தமும் எம் நெஞ்சகளில் வாழுகிறாய்

எமது குலதெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டும், உதவிகள், ஆறுதல்கள் அளித்தவர்களுக்கும். அனுதாபச் செய்திகளை அனுப்பிய யாபேருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் 27-1 93 எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல, 21. நடராசா வீதி, குளப்பிட்டிச் சந்தி. கொக்குவில் மேற்கு.

மகன் மருமகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்

(4153)

### வவுனியா-மன்னார் எல்லையில்

# சிங்களக் குடியேற்றத்தை விரிவாக்க 10 கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

மன்னார் வவுனியா மாவட்ட எல்லைப்புற பகுதியாகிய தந்திரிமலைப் பிராந்தியத்தை அபிவிருத்தி செய்வதற்காகப் பத்துக் கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிறிலங்கா ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் ஆரம்பிக்கப்பட இருக்கும் ஒருங்கிணைந்த திட்டமொன்று அடுத்த மாதம் தொடக்கம் இப்பகுதியில் செயற்படுத்தப்படவுள்ளது. புனர்வாழ்வு, புனர்நிர்மாண சமூகநல விருத்தி அமைச்சின் நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கும், இந்நிதியைப் பயன்படுத்தி, விவசாயம், கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், நெடுஞ்சாலை அபிவிருத்தி என்பனவற்றிக்கான வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 8 200 சிங்களவர்கள் பெரும் பயன் பெறுவார்கள் என்று தெரிய வருகிறது.

இதற்கான திட்டம் அண்மையில் அநுராதபுரம் கச்சேரியில் நடைபெற்ற மாநாடொன்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இம்மாநாட்டில் தந்திரிமலைப் பகுதியின் பிரதம குரு சங்கைக்குரிய சந்திரரட்ண தேரோ உட்பட புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சின செயலர் இிறிஸ்டி சில்வா, துறைமுக கப்பல்துறை அமைச்சு செயலாளர் டி. பி. தசநாயக்கா, வடமத்திய மாகாண பிரதம செயலாளர் யூ. பி. விஜயசிங்க வட பிராந்திய இராணுவ தளபதி றோகான் தலுவத்த ஆகியோர் சமூகம் அளித்திருந்தனர்.

மன்னார் வவுனியா மாவட்டங்களின் எல்லையோரமாக அமைந்திருக்கும் தந்திரிமலைப் பகுதியில் இருந்து அண்மையில் சிங்களக் குடியேற்ற வாசிகள் வெளியேற ஆரம்பித்திருந்தது தெரிந்ததே.

---

## சங்காபிஷேகம்

(குருநகர்)

அளவெட்டி தெற்கு சிறிநாகவரத நாராயணர் நாகேஸ்வரம்) தேவஸ்தானத்தில் கோவில் கொண்டுள்ள சிறி சொர்ண மனோன்மணி ஆலயத்தில் அளவெட்டி வடக்கு தவளக்கிரி சிறிமுத்துமாரி அம்பாள் கோவில் மணவாளக்கோல பிரதிதின சங்காபிஷேக விழா எதிர்வரும் தைத்திங்கள் 15ஆம் நாள் வியாழக்கிழமை காலை 9-12 மணிக்கு நடைபெற இருக்கிறது.

---

## வங்கியாளர் நிலையம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வங்கியாளர் சங்கமும் நிலையமும் கடந்த 15-ம்திகதி அன்று நாவலர் மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வு யாழ் மாநகர சபை ஆணையாளர் வி.பி. பாலசிங்கம் அவர்களினால் மங்கள விளக்கேற்றி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இவ் வைபவத்தில்நகரின் சகல வங்கி ஊழியர்களும் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் வங்கி முகாமையாளர்கள் இதன் நோக்கங்களைப் பற்றி எடுத்துரைத்தார்கள். மேலும் தெரிவு செய்யப்பட்ட சங்கத்தின் தலைவராக க. கணேசலிங்கம், உப தலைவராக ஆர் அருளானந்தன், செயலாளர் ஆர். வெங்கட்ராமன், பொருளாளராக எம். சிவபாலகணேசன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## திருட்டு

சரசாலை தெற்கு பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட கந்தசாமி என்பவரின் வீட்டில் கடந்த வியாழன் இரவு தாலிக்கொடி. சங்கிலி உட்பட ரூபா 2500ரொக்கப்பணமும் திருடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

---

# முதல் எயிட்ஸ் நோயாளி திருமலையில் கண்டுபிடிப்பு

திருக்கோணமலை பிரதேசத்தில் முதன் முறையாக எயிட்ஸ் நோயாளி ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக திருக்கோணமலை மாவட்ட சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட இந்த எயிட்ஸ் நோயாளி வெளிநாடு ஒன்றில் கடமை புரிந்துவிட்டு நாடு திரும்பியவர் எனவும், இன்னும் பலர் இந் நோயினால் பீடிக்கப்பட்டிருக்கலாம் எனவும், திருக்கோணமலையின் நிலாவெளிப் பகுதியில் மேலும் பல எயிட்ஸ் நோயாளர்கள் இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

---


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம்.

**93** கலை, வர்த்தகம்
சனி, ஞாயிறு மீட்டல்

ஆரம்பம்:- 30-01-93, 8.00 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — | திரு. விக்கி |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்துநாகரிகம்] | | |
| இந்துசமயம் ] | — | திரு. காரை.சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராசா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறிதரன் |

பிரத்தியேக கணக்கியல் மீட்டல்

திரு S. K பிரபாகரன் [2.00 — 5.00] மணி

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளலாம்,

(இ/5860)



## அறிவித்தல்

தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த A/L கணக்கியல் வகுப்புகள் யாவும் மீண்டும் வழமையான நேர சூசிப்படி 28-1-93 தொடக்கம் ஆரம்பம்.


A· கலைச்செல்வன்
அச்சுவேலி

(4150)


---

# கனவில் சுமக்கும் கதிரவன்

# 5ஆம் ஆண்டு



# லெப். முரளி

## (சிவசுப்பிரமணியம் ஜெயக்குமார்)

(விபுலானந்தர் வீதி, மாதகல், யாழ்ப்பாணம்.)

மனிதனாய் – 18-8-1969
மாவீரனாய் – 26-1-1988

எங்ஙனம் மறக்க?
வங்கம் தாண்டி வெள்ளைக் கொடியுடன்
வெங்களம் வந்ததை.........
சங்கானைச் சந்தியை.
உன் வைத்த விழிக்குறிகளை.........
அந்தோ! கவிழ்ந்துபோனது கனரக வண்டியா?
பிராந்தியச் சண்டியன் ஆணவம் கூடவே!
கிழிந்த வெள்ளைக் கொடியினதூடே
இந்திய முகத்துக் கோரம் அம்பலம்! - இது
புலிவீர் மகத்துவம் - அதிலுன்
ஒருவீர சாதனை உதாரணம்.
கனவுகளில் நீ சுமந்த கதிரவனின்று
எமது மனங்களில் - ஆதலில்
எங்ஙனம் மறக்க?

யாழ். வட்டுக்கோட்டைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவு அடைந்தார்.

- குடும்பத்தினர்

'மானியம்பதி'
மானிப்பாய் - யாழ். (4114)

### சிந்தனைக்கு

சும்மா இருந்து துருப்பிடித்து தேய்வதை விட உழைத்து தேய்ந்து அழிவது சிறந்தது.
— ரிச்சர்ட் சம்பர் லேண்ட்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 26-01-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண் - 05

## பிரச்சினை தமிழருடையது

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை தற்பொழுது நகல் வடிவில் இறுதிக் கட்டத்தில் இருப்பதாக அறிய வருகின்றது. இத்திட்டமானது விரைவில் தெரிவுக் குழுவின் அங்கிகாரத்தைப் பெற்றவுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இதேவேளை இத்தெரிவுக் குழுவின் நகல் திட்டத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களுக்கும் தனித்தனி 'சமஷ்டி அமைப்பு' முறையிலான ஆட்சி அமைப்பை உருவாக்குவதெனவும், இதற்கு ஏற்றாற்போல் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டுமென அரசாங்கத்திடம் சிபார்சு செய்யவுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

பாராளுமன்றத் தெரிவுக் குழு மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படும் மேற்படி முடிவு வேடிக்கையானதும், ஏற்க முடியாததும் ஆகும். வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களுக்கும் சமஷ்டி அமைப்பிலான ஆட்சி முறையை ஏற்படுத்துவதென்பது; தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்குரிய தீர்வுத் திட்டம் தயாரிக்க முற்பட்டுள்ளதா? அல்லது சிங்களவரின் குறைபாடுகள் பற்றி ஆராய முற்பட்டுள்ளதா? என்ற கேள்வியையே எழுப்புகின்றது.

இதே போன்றே 1987 இல் சிறிலங்கா - இந்தியா சமாதான உடன்படிக்கையின்போது தமிழரின் தேசிய இனப் பிரச்சினைத் தீர்விற்கென உருவான உடன்பாடு வடக்கு - கிழக்கிற்கென ஒரு மாகாண சபையையும் ஏனைய மாகாணங்களுக்கென ஏழு மாகாண சபைகளையும் உருவாக்கியது. அதாவது, பிரச்சினைக்கு அப்பாலும் சென்றது.

ஆனால், அரசாங்கத்திடம் சிங்களவர் எவரும் மாகாணசபை ஒன்றை உருவாக்குமாறு கோரவில்லை. அதாவது எவரும் கேளாத ஒன்றை சிங்களவருக்கு அன்பளிப்பாக அரசாங்கம் வழங்கியது. அதனால், மாகாண சபை அமைப்பே தேவையற்றதொன்று. வீண் விரயமான செலவீடு என சிங்களவர் தரப்பில் இன்று தெரிவிக்கப் படுகின்றது. இந் நிலையில், ஒன்பது மாகாணங்களுக்கும் தனித்தனி சமஷ்டி முறையிலான ஆட்சி அமைப்பது எனத் தெரிவுக் குழு முடிவு செய்யுமானால் சிங்களவரைப் பொறுத்து தேவையற்ற தொன்றாகவே இருக்கும்.

இவ்வாறானதொரு முடிவு மூலம் பாராளுமன்றத் தெரிவுக்குழு தமிழ் மக்களுக்கு நாம் விசேடமாக ஒன்றையும வழங்கிவிடவில்லை என வற்புறுத்த முற்படலாம். அத்தோடு தெரிவுக்குழுவின் முடிவால் சிங்களவர்களில் ஒரு பகுதியினர் திருப்தியும் அடையலாம்.

ஆனால் சிங்களவரைத் திருப்திப்படுத்தும் நோக்கில் சிங்களவர் வாழும் ஒவ்வொருமாகாணங்களுக்கும் சமஷ்டி அமைப்பு முறையை, இனப்பிரச்சினைக்கு அப்பாற் பட்டு பாராளுமன்றத் தெரிவுக் குழு சிபார்சு செய்வதைப் பற்றி தமிழ்மக்கள் கவலைப்பட ஏதுமில்லை. இது அவர்களுக்குத் தேவையில்லாத விடயமும் ஆகும்.

ஆனால், தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணங்களை தனித்தனி சமஷ்டி அமைப்பின் கீழ் கொண்டு வருவதை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை. சிங்களவருக்குரிய பிரச்சினைகள் அல்ல தமிழர்க்குரிய பிரச்சினை, தமிழருக்கு உரிய பிரச்சினை தனியானது. அவர்களின் சுய நிர்ணய உரிமையுடன் கூடியது. இந் நிலையில் தமிழர் தாயகத்தை துண்டாடும் தெரிவுக் குழு சிபார்சு செய்ய உள்ளதாகக் கூறப்படும் அச் சமஷ்டி அமைப்பு அதிகாரம் எந்தளவிற்குக் கொண்டுள்ளது என்ற கேள்வி இன்றியே தமிழ்மக்களால் நிராகரிக்கப்படும். அதாவது முதலில் தமிழர் தாயகம் ஏனையவை பிறகு. இதுவே தமிழரின் இன்றைய நிலைப்பாடு.

ஐ. நா. தீர்மானங்கள் நிறைவேற்றல்;

# அமெரிக்கா இரட்டை வேடம்; பிரிட்டிஷ்பத்திரிகை கண்டனம்

(லண்டன்)

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களை அமுலாக்குவதில் இரண்டு விதமான அணுகுமுறையை அமெரிக்கா கடைப்பிடிப்பதாகக் கூறும் ஆசிரியத் தலையங்கமொன்றை லண்டனிலிருந்து வெளியிடப்படும் கார்டியன் சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

ஈராக்கின் மீது ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தைக் காட்டி பெரும் எடுப்பிலான நிர்ப்பந்தங்களைப் பிரயோகித்து வரும் அதேவேளையில் நாடு கடத்தப்பட்ட பாலஸ்தீனியர் விவகாரம் தொடர்பாக ஐ. நா. நிறைவேற்றிய தீர்மானங்களை அமுலாக்குவதில் இஸ்ரேல் மீது நிர்ப்பந்தம் பிரயோகிக்கப்படவில்லை எனவும் சுட்டிக் காட்டியுள்ளது.

ஐ. நா. தீர்மானங்களை ஏற்றுக் கொள்ள இஸ்ரேல் தொடர்ந்தும் மறுப்பு தெரிவித்து வருமானால் அது அதற்காகப் பெரும் விலை செலுத்த நேரலாம் என்றும் கார்டியன் தனது தலையங்கத்தில் எச்சரித்துள்ளது.

## காஷ்மீர் விவகாரத்தில் மூன்றாவது தரப்பிற்கு இடமில்லை

– பிரிட்டன் பிரதமர் தெரிவிப்பு

(டில்லி)

இந்தியா, மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் நண்பர்களை காஷ்மீர்விவகாரம் கவலைக்கு உள்ளாக்கி வருவதாக பிரிட்டன் பிரதமர் ஜோன் மேஜர் புதுடில்லியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசும்போது தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்; இருநாடுகளினதும் அரசுகளின் மூலமாகவே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படல் வேண்டும் எனவும் தெரிவித்தார். இதற்காக மூன்று கட்ட அணுகு முறை பற்றிய யோசனை ஒன்றையும் அவர் வெளியிட்டார்.

முதலாவதாக ஒரு திருப்திகரமான சூழ்நிலை உருவாக்கப்படல் வேண்டும். இரண்டாவதாக தீவிரவாதிகளுக்கு சம்பந்தமில்லாதவர்களிடம் இருந்து கிடைக்கும் நிதியுதவி நிறுத்தப்பட வேண்டும். மூன்றாவதாக பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்பதுவே அவர் வெளியிட்ட மூன்று கட்ட அணுகு முறை ஆகும். எனினும் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் எந்தவொரு மூன்றாவது நாட்டுக்கும் இடமில்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

## ஆண்டிப்பட்டியில் மோதல் பொலிசார் சூடு; ஒருவர் காயம்

(சென்னை)

மதுரை மாவட்டம்ஆண்டிப்பட்டிக்கு அருகே வன்முறைக் கும்பலொன்றை கலைப்பதற்காக காவல்துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது ஒருவர் காயமடைந்ததாக தெரியவருகின்றது. காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். ஆண்டிப்பட்டியிலிருந்துபாணாவிலக்கு என்னும் இடத்திற்கு பயணிகளை ஏற்றிச் செல்வதில் இரண்டு வாகன சொந்தக்காரர்களிடையே எழுந்த போட்டிதான் இந்தமோதலுக்குக்காரணம் என்றுசொல்லப்படுகிறது.

இச்சம்பவத்தில் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட ஐந்து காவல்துறையினர் படுகாயம் அடைந்துள்ளனர்.

### இஸ்ரேல் கவலை

முன்னர் ஒருபோதும் இல்லாத வகையில் இஸ்ரேலின் மீது பொருளாதாரத் தடை கொண்டுவருவது பற்றி ஐக்கிய நாடுகள் சபை ஆராய்ந்து வருவதாகவும், இதையிட்டு இஸ்ரேல் கவலை கொண்டிருக்கிறது.

### மீளாய்வு

பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. எஸ். முருகேசம்பிள்ளையின் பணிப்புரையையடுத்து கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகள் தோறும் 'அ', 'இ' குடும்ப பதிவு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன. [யோ]

### பொலநறுவையில்

புலிகள் நடாத்திய தாக்குதலில் ஓர் இராணுவச் சிப்பாய் பலியாகியதாக தெரிவிக்கப்படுகிறது இத்தாக்குதலில் ஏனைய படையினர் தப்பி ஓடிவிட்டனர்.

### மீட்புநிதி

இதுவரை மீட்பு நிதி செலுத்த தவறியோர் இந்நாட்களில் தமது மீட்பு நிதிக் கடனைச் செலுத்தலாம் என தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் வெற்றியரசன் தெரிவித்துள்ளார்.

### 7 வேங்கைகள்

**கனான**

கப்டன் ரவிச்சந்திரன் சுப்பிரமணியம் ஆனந்தன், 01-ம் கட்டை ஓமந்தை வவுனியா.

லெப்டினன்ட் பிரதீப் துளசிதாஸ்திருக்கேதீஸ்வரன், மடுக்கோயில், மன்னார்.

லெப்டினன்ட் சரீமிளன் இராசையா இராசநாயகம், 01-ம் படிவம், சேமமடு, வவுனியா.

2-ம் லெப்டினன்ட் குணபாலன்/ராஜன் இராமலிங்கம் ஆனந்தகுமார், இரணைமடுச்சந்தி, கிளிநொச்சி.

ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### கைப்பற்றப்பட்ட

- நடுத்தர ரவைகள் - 1146
- 40 எம். எம். எறிகணை - 12
- ஜே. ஆர். கைக்குண்டு - 02
- பைனாகுலர் - 01
- ஏ. கே. மேக்சர் - 02
- போகஸ் லைட் - 02
- மழை கவச அங்கி - 01
- கிட்பாக் - 02
- தண்ணீர் கான் - 01
- தண்ணீர் கான் கோல்சர் - 01

### பாடசாலை

வுள்ளது. இவ்வாறு பெறப்படும் தொகையைக் கொண்டு பாடசாலையின் ஏதாவது அபிவிருத்திப் பணிக்குப் பயன்படுத்த முடியும்.

இவ்வாறு பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினை உருவாக்காமல் இருக்கின்ற பாடசாலைகள் உருவாக்கி வங்கிக் கணக்கை ஆரம்பித்து இதற்கான ஆவணங்களை கோட்டக்கல்வி அலுவலகங்களில் சமர்ப்பித்து மேற்படி தொகையைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர்கேட்டுக்கொண்டுள்ளார்

### திருமலை

டன. இத்தாக்குதலின்போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

இத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

### வன்னி

இரண்டாவது தாக்குதல் செட்டிகுளத்தில் இடம் பெற்றது. செட்டிகுளம் பகுதியிலுள்ள முதலியார் குளத்தில் அமைந்திருந்த சிறிலங்காஇராணுவ தொடர் காவலரண்கள் மீது நேற்று அதிகாலை 12-45 மணியளவில் விடுதலைப்புலிகள் நடாத்திய திடீர் அதிரடி தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் பலியாகினர். ஒன்பது காவலரண்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றி அழிக்கப்பட்டன. ஐந்து நிமிட நேரத்தில் இக் காவலரண்கள் விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சியடைந்தன. இத் தாக்குதல் 30 நிமிடநேரம்நடைபெற்றது

இதேவேளை நேரியகுளம் இராணுவ முகாமிலிருந்துஉதவிக்கு வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகளால் கடும் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் படையினர் தரப்பில் ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை.

இத் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது செட்டிகுளம், தந்திரிமலை ஆகிய முகாம்களிலிருந்து ஆட்டிலெறி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலின்போது நான்கு விடுதலைப்புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

### சிகிச்சை நிலையம் திறப்பு

பலாலி இராணுவ காவலரண்கள் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்த லெப்டினன்ட் டில்லி/செல்லி நினைவாக முதலுதவிச் சிகிச்சை நிலையம் ஒன்று அரியாலை டயஸ் வீடமைப்புத் திட்டத்தில் நேற்று பிற்பகல் 3.50 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

### பிரான்ஸ்

டாக்டர்கள், தாதியர்களைக் கொண்ட குழு பருத்தித்துறையில் தரித்து நின்ற 'குமாரி' கப்பல் மூலம் நேற்று மாலை காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டது.

இவர்கள் காங்கேசன்துறை சென்று பின்னர் பலாலியிலிருந்து விமானம் மூலம் கொழும்பைச் சென்றடைவர். (யோ)

### தமிழகத்தில்

இதேவேளை தளபதி கிட்டுவின் மரணத்திற்கு காரண மாணவர்களைக் கண்டித்து இந்தத் தொடர் குண்டுகளை மூன்றிடங்களிலும் தாம் வெடிக்கச் செய்திருப்பதாக தமிழர் விடுதலைப்படை எனும் அமைப்பு உரிமை கோரியுள்ளது.

மேலும் தமிழ்நாடு சென்னை நகரின் பல இடங்களிலும் தளபதி கேணல் கிட்டுவிற்கும் ஏனைய ஒன்பது போராளிகளுக்கும் வீர வணக்கம் தெரிவிக்கும் பெரிய சுவரொட்டிகள் பகிரங்கமான இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன. இவை பெருந்தொகையில் ஒட்டப்பட்டுள்ளதாகவும் இவற்றை அகற்றும் முயற்சியில் தமிழ்நாடு காவல்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தமிழ்நாட்டில் தளபதி கிட்டுவின் மரணம் தொடர்பான செய்திகள் தமிழக அரசினாலும், மத்திய அரசினாலும் திரித்துக் கூறப்படுவதும் உண்மைச் செய்திகள் இருட்டிப்புச் செய்யப்படுவதும் தெரிந்ததே அத்துடன் கிட்டுவின் மரணம் தொடர்பாக போராட்டம் நடத்த முயன்ற தமிழக தலைவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### பொலிகண்டி கடற்பகுதியில்

# கடற்படை ஏவிய குண்டு 'குமாரி' அருகே விழுந்தது

[வடமராட்சி]

பொலிகண்டி கடற் பகுதியில் நேற்று முன்தினம் காலை ஏழு மணியளவில் ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படையினர் மீனவர்களுக்கு ஏவிய பீரங்கிக் குண்டுகள் "குமாரி" கப்பல் அருகில் விழுந்து வெடித்தன.

பருத்தித்துறை துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருந்த போது அருகே மல பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்த போதிலும் "குமாரி" கப்பலுக்கு சேதங்கள் ஏற்படவில்லை.

இந் நிலையால் 'குமாரி' கப்பல் நேற்று உயர நடுக்கடலால் துறைமுகத்தை வந்தடைந்தது. இதேவேளை நேற்றுப் பகல் 11.45 மணியளவில் சிறிலங்கா கடற்படை விசைப்படகு வெற்றிலைக்கேணி நோக்கி ரோந்து சென்றதையும் அவதானிக்க முடிந்தது. [யோ]

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொருள்கள் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

"குமாரி" கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்துக்கு எடுத்துவரப்பட்ட அத்தியாவசியப் பொருள்களில் ஒரு பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனைக்காகவும் விநியோகிக்கப்பட உள்ளது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கென பொருள்களை ஏற்றிவரும் கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைய காலதாமதம் ஏற்படுவதால் மேற்படி ஏற்பாட்டைச் செய்வதற்கு யாழ். செயலகம் முன்வந்துள்ளது.

அதேவேளை இடம் பெயர்ந்த மக்களுக்கான இலவச உலர் உணவு விநியோகத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களும் யாழ். செயலகத்தினால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதனால் மிக விரைவில் இடம் பெயர்ந்த மக்களுக்கான இலவச உலர் உணவு நிவாரண விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளது. (க)

## அழுகிய நிலையில் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(வடமராட்சி)

புலோலி வல்லிபுரக் குறிச்சிப் பகுதிக் கிணறு ஒன்றில் இருந்து நடுத்தரமானவர் ஒருவரின் சடலம் ஒன்று அழுகிய நிலையில் நேற்று மீட்கப்பட்டது.

இவர் தம்மையா கணேசமூர்த்தி (வயது 40) வல்லிபுரக் குறிச்சியைச் சேர்ந்தவரென பின்னர் அடையாளம் காணப்பட்டார்.

மேற்படி இறந்தவர் ஒரு நோயாளி என்றும் தெரிவிக்கப்பட்டது. இச்சடலம் மரண விசாரணை அதிகாரி வீ நடராசாவினால் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு தற்கொலை என தீர்ப்பு வழங்கப்பட்டது. [யோ]

## அனுமதி அட்டைகள்

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அவரவர் பகுதி கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். யாழ். மாவட்டத்தில் 71 பரீட்சை நிலையங்களில் இப் பரீட்சை நடைபெறவுள்ளது.

## வட்டமிட்ட ஹெலி

நேற்று நண்பகல் 12.30மணியளவில் யாழ். நகரை வட்டமிட்ட ஹெலி, கல்முனைப் பக்கமாகச் சென்று மறைந்தது

## பரீட்சை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இம்மாதப் பிற்பகுதியில் நடைபெறவிருந்த இலங்கை நிர்வாக சேவைக்கான ஆட்சேர்ப்புக்குரிய போட்டிப் பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு பிற்போடப்பட்டுள்ளதாக பரீட்சை; திணைக்களம் அறிவித்துள்ளது இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

மேலும் உயர் பதவி நிலைப் பரீட்சைகள் யாவும் இனி கொழும்பில் மட்டுமே நடைபெறவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார். [பா]

## தளபதி கிட்டு வந்த கப்பலின் ஊழியரை விடுவிக்க வழக்கு

(சென்னை)

கிட்டு பயணம் செய்த எம். பி. அகத் என்ற கப்பலில் இருந்து கடலில் குதித்து உயிர் தப்பிய கப்பல் ஊழியர்கள் ஒன்பது பேரையும் விடுதலை செய்யக் கோரித் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பி. நெடுமாறன் தாக்கல் செய்த றிட் மனு சென்னை உயர் நீதி மன்றததில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

நெடுமாறனின் இந்த மனுத் தொடர்பாக சென்னை உயர் நீதி மன்றம் மத்திய பாதுகாப்பு அமைச்சு, உள்துறை அமைச்சு மற்றும் தமிழ்நாடு பொலிஸ் துறைக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டது. வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதிகள் வெங்கடசாமி, சாமிதுரை ஆகியோர் இந்த உத்தரவைப் பிறப்பித்தனர்.

சர்வதேசக் கடற் பரப்பில் புலிகளின் கப்பலான எம். பி. அகத் வழிமறிக்கப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டதாக தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பி. நெடுமாறன் தன் மனுவில் தெரிவித்துள்ளார்.

## 11 இலங்கை மீனவர் தூத்துக்குடியில் கைது

தூத்துக்குடிக்கு அருகே இந்தியக் கடற்பரப்பினுள் புகுந்த மூன்று இலங்கை மீன்பிடிப்படகுகளை இந்தியக் கடலோரக் காவற்படையினர் கைப்பற்றியுள்ளனர். இந்த மீன்பிடிப் படகுகளில் இருந்த பதினொரு மீனவர்களும் கரைக்கு கொண்டு வரப்பட்டு காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு வழக்குப் ப .வு செய்யப்பட்டுள்ளது.

## சங்கீத நடன பெறுபேறுகள் தபாலில் சேர்க்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

90, 91 ஆம் ஆண்டுகளுக்குரிய நடை பெற்று முடிவடைந்த. சங்கீத நடன பாடங்களுக்கான பரீட்சையின் யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் யாவும் பரீட்சைத்திணைக்களத்தினால் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார் என யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. (பா)

## வதிவிட வேளாண்மை போட்டி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் வதிவிட வேளாண்மைப் போட்டியில் தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் மக்களும் பங்கு பற்றும் வண்ணமாக இப்போட்டி முகாம்களுக்கிடையே நடைபெற இருக்கிறது.

மேற்படி போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக கோட்டச் செயலகத்திலும் மற்றும் முகாங்களில் உள்ள உற்பத்திக் குழுவிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

## சமுகம் தரவும்

1992-ம் ஆண்டு தொழில் நுட்ப கல்வி உதவி ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பித்து நேர்முக டரீட்சைக்கு தோற்ற முடியாமல் போனவர்கள் நாளை யாழ். கல்வி திணைக்கள தொழில் நுட்ப பிரிவில் காலை 9.30 மணிக்கு சமூகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.

## கட்டுநிதி

இச்சம்பளப் பணம் இன்று முதல் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை இப்பணம் கடந்த 20-ம் திகதி வழங்கப்பட வேண்டியது என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## சிறப்புரை

திராவிட மொழி ஆய்வின் இன்றையநிலையில் தமிழ்- மப்பானிய ஒப்பீடு என்னும் தலைப்பின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் அ சண்முகதாஸ், உரையாற்றவுள்ளார். இன்று மாலை மூன்று மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இந்த உரையரங்கு இடம் பெறவுள்ளது.

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

கிட்ணபிள்ளை விக்னேஸ்வரன் என்பவரின் அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி ஈழநாதம் பணிமனையில் பெற்றுக் கொள்ளவும்.

## திருமலையில் வீரச்சாவு



2ம் லெப்டினனட் வேணுச்செல்வன் (சுரன்)



2-ம் லெப். சோழன - (பிரம்பன்)



வீரவேங்கை சத்தியசாயி - (புவிராஜ்)

## விடைத்தாள்கள் ஒப்படைப்பு

க.பொ.த (சாதாரணதரம்) பரீட்சையின் யாழ் மாவட்ட மாணவர்களின் விடைத்தாள்கள், யாழ்ப்பாணத்திலிருந்து கப்பல் மூலம் கொண்டு செல்லப்பட்டு பரீட்சைத் திணைக்களத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. இதனுடன் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் இறுதிப்பரீட்சைக்கான விடைத்தாள்களும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என வடமாநில கல்விப்பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம் கூறியுள்ளார்.

## செட்டிகுளத்தில் வீரச்சாவு



கப்டன் ரவிச்சந்திரன்



லெப். சாமிலன்



லெப். பிரதீப்



2ம் லெப் குணபாலன்- (ராஜன்)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

25- 01- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8150

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

24-5036, 28 1706, 24-3906, 26-5351, 27-1939, 42 6452, 26 2297, 28 2049, 41-0534, 27-6583, 27-8160, 27-8754, 28-4550, 26-672.

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

26-4393, 24 5703, 26-0375, 24-3262, 42-1046, 24 5460, 24-7941, 27-6063, 26-8878, 26 7663, 24-3934, 26 9207, 42-2397, 26-5870, 28-3306, 42-9625, 26-7393, 27-1292, 42-0488, 27-6563.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.